# பொதுக்காலம் 12ஆம் வாரம் - ஞாயிறு

## முதல் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

வலிமை வாய்ந்த வீரனாய் நம்மோடு வாழும் இறைவனின் திரு சன்னதியை நோக்க ஆவலோடு வந்துள்ள உங்கள் அனைவரையும் பொதுக்காலம் 12ஆம் ஞாயிறு திருப்பலிக்கு அன்புடனே அழைக்கிறோம்.

இன்றைய முதல் வாசகத்தில், ஆண்டவரின் உடனிருப்பை வெளிப்படுத்தும் வார்த்தைகளை இறைவாக்கினர் எரேமியா எடுத்துரைக்கிறார். எத்தனை சோதனைகள் நம்மைச் சூழ்ந்தாலும் சோதனைகளை விட என் ஆண்டவர் பெரியவர் என்ற நம்பிக்கையை நம் வாழ்வில் வெளிப்படுத்துவோம்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில், “ஆன்மாவைக் கொல்ல இயலாமல், உடலை மட்டும் கொல்பவர்களுக்கு அஞ்ச வேண்டாம்” என்ற உயிருள்ள வார்த்தைகளைச் சொல்லி, துணிவூட்டுகின்றார் இயேசு.

இறைவன் உறையும் ஆன்மா, அதை மாசு அணுகாமல் காக்க வேண்டியது நமது கடமை என்பதை உணர்ந்து, நம் எண்ணங்களாலும் செயல்களாலும் நம் வாழ்வை முறைப்படுத்துவோம். அதற்குத் தேவையான ஆற்றலையும் ஞானத்தையும் இறைவன் தர வேண்டி, இப்பலியில் இணைவோம்.

### இறைமக்களின் மன்றாட்டுகள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. அருள்கொடைகளினால் ஆசீர்வதிப்பவரே எம் இறைவா!

உமது இறையரசுப் பணியை தொடர்ந்து ஆற்றி வரும் எமது திரு அவைப் பணியாளர்களை ஆசீர்வதியும். உம் மந்தையாகிய திருச்சபையை இறை நம்பிக்கையில் வளர்த்தெடுக்கவும், சவால்களைத் துணிவோடு எதிர் கொள்ளும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. நேர்மையாளரைச் சோதித்து அறிபவரே எம் இறைவா!

எம்மை ஆளும் ஆட்சியாளர்களை ஆசீர்வதியும். சுயநலப் போக்கிலே வாழ்ந்து, நாட்டு மக்களை தங்களது நலன்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ளும் இவர்களுக்கு நல்லதொரு மாற்றத்தை அருளி, நாட்டினை முன்னேற்றப் பாதையில் வழிநடத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. ஞானமும் அறிவும் நிறைந்த முழுக் கருவூலமாகிய இறைவா!

கல்வி கற்கும் ஒவ்வொரு பிள்ளைகளையும் ஆசீர்வதியும். நீர் வளர வளர ஞானத்திலே வளர்ந்து இறைவனுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்தது போல, எம் பிள்ளைகளும் உம்மைப் பற்றிய அறிவிலும், கல்வி அறிவிலும் சிறந்து விளங்கவும், நல்லதொரு எதிர்கால வாழ்வையும் பெற்றுக் கொள்ளவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. நலிந்தோரைக் கண்ணோக்குபவரே எம் இறைவா!

உடல், உள்ள நோய்களினால் வருந்துவோரைக் கண்ணோக்கும். உமது குணமளிக்கும் தூய ஆவியினால் தங்களது நோயின் கொடுமைகளிலிருந்து விடுதலை பெற்று, உமக்கு உண்மையுள்ள சாட்சிகளாக வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com